நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 649/2024

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | உதயகுமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | சங்கரய்யா |
| கிராமம் | : | காகாபாளையம் |
| வட்டம் | : | சங்ககிரி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW7 |
| வயது | : | 33 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.56AM

1. நான் தற்போது கணினி வழி குற்றப்பிரிவு சேலம் மாவட்டத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.07.2021 ம் தேதி ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த இண்டிமேசனை பெற்று தலைமை காவலர் 819 சுந்தர்ராஜன் என்பவரை மருத்துவமனை அனுப்பி அங்கு

உள்நோயாளியாக இருந்த வசந்தி என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று என்னிடம் ஆஜர் செய்ததை பெற்று நிலைய குற்ற எண்.248/2021 ச.பி.294(பி), 323, 324, 427, 506(2) இ.த.ச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் எதிரிகள் மூன்று பேர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டுர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.07.2021 ம் தேதி காலை 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சித்தையன், சஞ்சீவி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் அ.த.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. சாட்சிகள் ஸ்ருதிகா, கிருஷ்ணன், சண்முகம், சித்தையன், சஞ்சீவி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மருத்துவமனையில் இருந்த வசந்தியை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். வாதிக்கு 22.07.2021 ம் தேதி வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் காயச்சான்றிதழ் பெற்றேன். (**ஓமலூர் அரசு மருத்துவமனையில் வசந்திக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. வாதிக்கு சிகிச்சையளித்த ஓமலூர் அரசு மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து 24.08.2021 ம் தேதி வாக்குமூலம் பதிவுசெய்தேன். மருத்துவமனை சென்று வாக்குமூலம் பெற்றுவந்த தலைமை காவலர் 819 சுந்தர்ராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

5. எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் 3 பேரும மாண்பமை சேலம் அமர்வு நீதிமன்றத்தில் பிணையம் பெற்றதால் அவர்களை கைதுசெய்யவில்லை. என்னுடைய புலன் விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில்

இருந்தும் புகார்தாரர் வசந்தியின் செல்போனை எதிரி உதயபாரதி என்பவர் வாதியின் செல்போனை பிடுங்கி உடைத்துவிட்டதாக தெரிவித்திருந்தார். ஆனால் விசாரணையில் தகராறில் செல்போன் தவறி கீழேவிழுந்து உடைந்துவிட்டதாக தெரியவந்தது.

6. எனவே இந்த வழக்கின் சட்டபிரிவை 294(பி), 323, 324, 427, 506(2) இ.த.ச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் இருந்து 294(பி), 323, 324, 506(2) இ.த.ச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். என்னுடைய புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 24.08.2021 ம் தேதி ச.பி. 294(பி), 323, 324, 427, 506(2) இ.த.ச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் அ.சா.1 வசந்தி மற்றும் அ.சா.2 ஸ்ருதிகா ஆகியோர் மீது 2ம் எதிரி இந்த சம்பவம் சம்மந்தமாக புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான். அ.சா.1 வசந்தி சம்பவயிடத்தில் சம்பவத்தின்போது உதவி ஆய்வாளர் உதயகுமார், 2 பெண் காவலர்கள் மற்றும் 2 ஆண் காவலர்கள் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து அவசர உதவி எண்.100 க்கு அழைப்பு வந்து அதன் அடிப்படையில் நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றோம்.
2. அன்றைய தேதியில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் 2 ம் எதிரி என்னுடைய செல்போன் எண்ணுக்கு போன் செய்து தகவல் சொல்லியதாகவும், நான் நேரில் வந்து புகார் அளிக்க சொன்னதன் பேரில் அப்பொழுதே காவல் நிலையத்திற்கு வந்து என்னிடம் புகார் அளித்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு புகார் அளித்தார். சம்பவம் நடந்த அன்றைய தினமா அல்லது அடுத்தநாளா என்று எனக்கு நியாபகம் இல்லை.
3. நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லும்போது சுமார் 06.00–06.30 மணியிருக்கும். நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லும்போது அ.சா.1 வசந்தியும், அ.சா.2 ஸ்ருதிகாவவும் எதிரிகளின் வீட்டிற்கு வெளியே நின்றுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்றுதான் அங்கிருந்து அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான்.
4. நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது அ.சா.1 வசந்தி என்னிடம் தனது அண்ணன் பணம் கொடுக்க வேண்டும் எனவும், கொடுக்க மறுக்கிறார் எனவும்

பணத்தை வாங்கிக்கொடுங்கள் எனவும், அதனால் தான் இந்த அடிதடி பிரச்சனை எனவும் என்னிடம் வாய்மொழியாக சொன்னார். நான் காவல் நிலையம் வந்து புகார் கொடுக்க சொல்லி சொன்னேன். ஏதேனும் காயம் ஏற்பட்டிருந்தால் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து புகார் வாக்குமூலம் கொடுக்க சொல்லியும் கூறினேன்.

5. சம்பவயிடத்தில் வைத்து தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அ.சா.1 வசந்தி என்னிடம் கூறவில்லை. யார்யார் அடித்தார்கள் என்று என்னிடம் கூறினாரா என்று எனக்கு நியாபகம் இல்லை. சம்பவத்தின்போது எதிரிகளின் வீட்டிற்கு அ.சா.1 வசந்தி மற்றும் அ.சா.2 ஸ்ருதிகா இருவரும்தான் அங்கு சென்றார்கள் என்றால் சரிதான்.

6. அ.சா.1 வசந்தி 2 ம் எதிரியை கடித்துவிட்டதாக 2 ம் எதிரி என்னிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதுசம்மந்தமாக குற்ற எண். 247/2021 என்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரியும் நான்தான்.

7. இந்த வழக்கின் 2 ம் எதிரி நங்கவள்ளி ஒன்றிய குழு தலைவராக 5 ஆண்டுகள் இருந்தார் என்று எனக்கு தெரியும். பொதுமக்கள் பிரச்சனைக்காக வேண்டி பல்வேறு போராட்டத்தில் கலந்துக்கொண்டதற்காக 2 ம் எதிரியின் பேரில் பல்வேறு வழக்குகள் உள்ளதென்றால் எனக்கு நியாபகம் இல்லை.

8. நான் சொன்னவாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் அன்றைய தினமே புகார் வாங்கி வழக்கு பதிவுசெய்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து நான் புகார்வாக்குமூலம் வாங்கவில்லை. சம்மந்தப்பட்ட நபர் சம்பவயிடத்தில் வைத்து புகார்வாக்குமூலம் தரவில்லை. இரவு அரசு மருத்துவமனையில் இருக்கும்போதுதான் புகார் வாக்குமூலம் கொடுத்தார்.

9. எனது புலன் விசாரணையில் அ.சா.1 வசந்தி தனது அண்ணன் தனக்கு ரூ.25 இலட்சம் பணம் கொடுக்க வேண்டும் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்த பணம் கொடுக்கல் வாங்கல் உண்மைதானா அதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்பது குறித்து நாங்கள் விசாரணை செய்யவில்லை. கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக ரூ.3 இலட்சத்திற்குள் இருந்தால்தான் நாங்கள் விசாரிப்போம். அதற்கு மேற்பட்ட தொகையிருந்தால் மாவட்ட குற்ற பிரிவில்தான் விசாரணை

செய்வார்கள் என்ற விவரத்தை நான் அ.சா.1 வசந்தியிடம் வாய்மொழியாக தெரிவித்திருந்தேன்.

10. இது அடிதடி பிரச்சனை சம்மந்தமான வழக்கு என்பதால் பணம் கொடுக்கல் வாங்கல் பற்றி நான் விசாரிக்கவில்லை. எந்த நேரத்தில் பிரச்சனை முடிந்து அனுப்பி வைத்தோம் என்று நேரம் சரியாக எனக்கு நியாகம் இல்லை. அவசர அழைப்பு கட்டுப்பாட்டு அறையில் இருந்து எங்களுக்கு தகவல் வந்த நேரத்தை முதல் தகவல் அறிக்கையில் தகவல் வந்த நேரமாக குறிப்பிடவில்லை. அ.சா.1 வசந்தி புகார் வாக்குமூலம் கொடுத்த நேரத்தைதான் தகவல் வந்த நேரமாக முதல் தகவல் அறிக்கில் குறிப்பிட்டுள்ளேன்.

11. ஏற்கனவே பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக அ.சா.1 வசந்தி 2013 ம் ஆண்டு எங்களது காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்தில் சுமார் 1 மணிநேரம் இருந்திருப்பேன். சம்பவயிடத்தில் சம்பவ நேரத்தில் எதிரிகள் அ.சா.1 வசந்தியை தாக்கும்போது நான் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லியிருந்தால் அதுதவறு.

12. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றாலும், அவர்கள் குடும்பதற்குள் ஏற்பட்ட சிறு வாய்தகராறை வழக்கின் புகார்தாரர் இருவரும் எதிரியின் வீட்டிற்கு வந்து தகராறு செய்ததை மறைத்து எதிரிகளின் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.36 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**